
**செப்டம்பர் – 27**

# தேசியச் செய்திகள்

## ஆதார் மீதான உச்ச நீதிமன்ற தீர்ப்பு

- மத்திய அரசின் முதன்மை திட்டமான ஆதார் திட்டத்தை அரசியலமைப்பின்படி செல்லுபடியாகும் என உச்சநீதிமன்றம் (செப்டம்பர் 26) அறிவித்துள்ளது.
- ஆதார் அட்டையின் எண்ணை நிரந்தர கணக்கு எண்ணுடன் (Permanent Account Number) இணைப்பதை கட்டாயமாகவும் வருமானவரி தாக்கல் செய்வதற்கு தேவையெனவும் அது தெரிவித்துள்ளது.



Compiled by Varun B. Krishnan | With inputs from Lakshmikumaran and Sridharan Attorneys

- இருப்பினும் வங்கி கணக்குகளை திறக்க ஆதார் எண் கட்டாயமில்லை எனவும் தற்போதுள்ள வங்கி கணக்குகளுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமில்லை என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- மேலும் உச்ச நீதிமன்றமானது ஆதார் தகவலை தனியார் நிறுவனங்களுக்கு அளிக்கும் ஆதார் சட்டத்தின் 57 வது பிரிவை ரத்து செய்துள்ளது.
- தனியார் நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களை ஆதார் எண்ணை வைத்திருக்க வலியுறுத்தும் இந்த பிரிவை அரசியலமைப்பிற்கு எதிரானது என அறிவித்துள்ளது.
- தற்போது நடைமுறையிலுள்ள 5 ஆண்டுகள் என்ற கால அளவை ரத்து செய்து ஆதார் அங்கீகார ஆவணங்களை 6 மாதங்களுக்கு மேல் சேமித்து வைக்க முடியாது எனவும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

## அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் நேரடி ஒளிபரப்பு

- இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் அமர்வில் நடைபெறும் அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளின் நேரடி ஒளிபரப்பிற்கு உச்சநீதிமன்றம் (செப்டம்பர் 26) அனுமதியளித்துள்ளது.

- நீதிமன்றத்தை நெரிசலற்றதாக மாற்றும் முயற்சியில் 'திறந்தவெளி நீதிமன்றம்' என்ற கருத்தை செயல்படுத்த வேண்டுமென இந்த அமர்வு கூறியுள்ளது.
- நீதிமன்றத்தின் கூற்றுப்படி பொது மக்களுக்கு நீதிமன்றத்தின் உள்ளே நடைபெறுவனவற்றை தெரிந்து கொள்வதற்கான உரிமை உள்ளது.
- இந்த முடிவானது மூத்த வழக்கறிஞரான இந்திரா ஜெய்சிங், சட்ட மாணவர் ஸ்னேஹில் திரிபாதி, பொறுப்புணர்வு மற்றும் ஒழுங்குமுறை சார்ந்த மாற்றத்திற்கான அரசு சாரா நிறுவன மையம் ஆகியவற்றின் மனுக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

## பூமியை போன்ற இரண்டு வெளிக் கோள்கள் கண்டுபிடிப்பு

- நாசாவின் வெளிக்கோள்களை ஆய்வு செய்வதற்காக அனுப்பட்ட செயற்கைக் கோளானது (TESS - Transiting Exoplanet Survey Satellite), பூமி போன்ற இரண்டு வெளிக்கோள்களான 'சூப்பர் எர்த்' மற்றும் 'ஹாட் எர்த்' ஆகியவற்றைக் கண்டறிந்துள்ளது.
- TESS ஆனது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் உள்ள கோள்களை கண்டறிவதற்காக ஏப்ரல் 2018-ல் ஏவப்பட்டது. இதுவே TESS-ன் முதல் கண்டுபிடிப்பாகும்.
- TESS ஆனது வெளிக் கோள்கள், தொலை தூரத்தில் உலகைச் சுற்றும் நட்சத்திரங்கள் என வானியல் ஆராய்ச்சியாளர்களால் அறியப்பட்ட விபரங்களை விரிவுபடுத்துவதற்கான இரண்டு வருட திட்டம் ஆகும்.
- சூப்பர் எர்த் கோளானது பை மென்சே சி (Pi Mensae c) எனப் பெயரிடப்பட்டுள்ளது. கிட்டதட்ட 60 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள இது சூரியனைச் சுற்றும் காலம் 6.3 நாட்கள் ஆகும்.
- ஹாட் எர்த் கோளானது LHS 3844 b என பெயரிடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 49 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள இது சூரியனைச் சுற்றும் காலம் ஒரு மணி நேரமாகும்.
- இரு கோள்களும் உயிரினங்களை ஆதரிக்க முடியாத அளவில் மிகவும் சூடாக உள்ளன.

## ஜன் தன் தர்ஷாக்

- நிதியியல் உள்ளடக்கத்தின் ஒரு பகுதியாக நிதி அமைச்சகமானது ஜன் தன் தர்ஷாக் என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நிதி சேவைகள் துறை (Department of Financial Services), நிதி அமைச்சகம் மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவை கூட்டாக இணைந்து நிதியியல் உள்ளடக்கல் முயற்சியின் பகுதியாக இந்த ஜன் தன் தர்ஷாக் செயலியை உருவாக்கியுள்ளன.

- இந்த செயலியானது நாட்டின் எந்தொரு இடத்திலிருந்தும் நிதி சேவைகளின் தொடர்பை பொது மக்களுக்கு வழங்குகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனம் - 'வாயு'

- மத்திய அறிவியல் & தொழில்நுட்பம் அமைச்சகம், புவி அறிவியல் அமைச்சகம், சுற்றுச் சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சர் காற்று மாசுக் கட்டுப்பாட்டு கருவி 'வாயு'வை (WAYU) தொடங்கி வைத்தார். (Wind Augmentation PurifYing Unit-பெரிய அளவில் காற்றை சுத்திகரிக்கும் பிரிவு)
- இந்த வாயுவானது (WAYU) டெல்லியின் ITO குறுக்கு சந்திப்பின் போக்குவரத்து சந்திப்பு மற்றும் முகர்பா சௌக் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.
- வாயுவானது அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி குழுமம் - தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தினால் (Council of Scientific and Industrial Research – National Environmental Engineering Research Institute : CSIR-NEERI) உருவாக்கப்பட்டுள்ளது.
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் நிதியுதவி அளிக்கப்பட்டு, தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகிறது.
- இந்த கருவியானது காற்று மாசுபடுத்தியை நீர்த்தலுக்கான காற்று உருவாக்கம் மற்றும் செயல்பாட்டில் உள்ள மாசுபடுத்திகளை அகற்றுதல் ஆகிய இரண்டு முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் செயல்படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஐ.நாவின் மிக உயர்ந்த சுற்றுச்சூழல் கௌரவிப்பு

- 2018 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் 'சாம்பியன்ஸ் ஆப் தி எர்த்' விருதானது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்தியாவில் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கை ஒழிப்பதற்கான முயற்சிகளுக்காக கொள்கைகளுக்கான தலைமைப் பிரிவில் மிக உயர்ந்த சுற்றுச்சூழல் கௌரவத்துடன் ஐநா சபையானது மோடியை அங்கீகரித்துள்ளது.
- சுற்றுச்சூழல்களில் மிகச்சிறந்த மாற்றங்களை கொண்டு வந்த உலகின் ஆறு பேருக்கு சாம்பியன்ஸ் ஆப் தி எர்த் விருது வழங்கப்படுகிறது.
- பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் மற்றும் மோடி ஆகிய இருவரும் கொள்கை தலைமைத்துவ பிரிவில் கூட்டாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.
- நீடித்த மற்றும் நிலையான ஆற்றல் பயன்பாட்டில் தலைமை வகித்ததற்காக "தொழில் முயற்சி தொலைநோக்கு பார்வைக்கான விருது" கொச்சியின் சர்வதேச விமான நிலையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

- இந்த விமான நிலையமானது உலகின் முதலாவது முழுவதும் சூரிய ஆற்றலால் இயங்குவதாகும்.
- மற்ற வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் மற்றும் பூர்வகுடிகளின் உரிமைகள் பாதுகாவலரான ஜோன் கார்லிங் | 20 வருடங்களுக்கு மேலாக பூர்வ குடிமக்களின் சுற்றுச்சூழல் உரிமைகளை மற்றும் நிலங்களை பாதுகாத்ததற்காக |
| சீனாவின் ஜீஜியாங்-இன் கிராமப்புற பசுமை மறுமலர்ச்சி திட்டம். | கிழக்கு சீனாவின் ஜீஜியாங் மாகாணத்தில் ஆறுகள் மற்றும் நீரோடைகளின் மாசுபட்ட பெரும் பகுதியை மாற்றியமைத்ததற்காக |
| பியான்ட் மீட் மற்றும் இம்பாசிபுல் ஃபுட் நிறுவனங்கள் | அறிவியல் மற்றும் புத்தாக்க வகை |

## பார்க்லேஸ் ஹீருன் இந்திய பணக்காரர் பட்டியல் - 2018

- பார்க்லேஸ் ஹீருன் இந்தியா பணக்காரர் பட்டியல் 2018-ல் இந்தியாவின் இரண்டாவது பெரிய நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவரான பில்லியனர் முகேஷ் அம்பானி 7வது ஆண்டாக தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.
- இந்த பட்டியலானது இந்தியாவில் ரூ.1000 கோடி அல்லது அதற்கு மேல் நிகர மதிப்புடைய சொத்துக்களை கொண்ட தனிநபர்களின் தொகுப்பாகும்.
- திரு. அம்பானியைத் தொடர்ந்து லண்டனைச் சேர்ந்த S.P. ஹிந்துஜா மற்றும் L.N. மிட்டல் ஆகியோர் உள்ளனர்.
- அசிம் பிரேம்ஜி இப்பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளார்.
- இந்த பட்டியலில் உள்ள 831 தனிநபர்களின் சொத்து மதிப்பானது 719 பில்லியன் டாலராக உள்ளது. இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ($2848 பில்லியன்) கால்பங்கு ஆகும்.

## பிபாவின் ஆண்டிற்கான சிறந்த வீரருக்கான விருது

- ஒரு தசாப்தமாக கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் லியோனல் மெஸ்ஸி ஆகியோரால் மேலாதிக்கம் செய்யப்பட்டு வந்த பிபாவின் ஆண்டிற்கான உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்ற விருதை லுகா மாட்ரிக் வென்றுள்ளார்.
- லிவர்பூல்லின் எகிப்திய முன்கள வீரரான முகமது சலா மற்றும் ரொனால்டோவை மாட்ரிக் முந்தியுள்ளார்.
- இவர் ரியல் மாட்ரிட் உடன் இணைந்து 5 பருவங்களில் 4 முறை சாம்பியன் லீக்கை வென்றதற்காகவும் குரோஷியாவை உலகக் கோப்பையின் இறுதிப் போட்டிக்கு வழிநடத்தியதற்காகவும் பிபாவின் 2017-18 பருவத்தின் சிறந்த

ஆட்டக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- மெஸ்ஸி மற்றும் ரொனால்டோ ஆகியோர் மட்டுமே உலக கால்பந்தாட்டத்தின் பிரதான தனிநபர் விருதை 2008 முதல் பல்வேறு முறைகளில் பிபாவிடம் இருந்து பெற்றுள்ளனர். இருவரும் தலா ஐந்து முறை பட்டங்களை வென்றுள்ளனர்.

# இதரச் செய்திகள்

## மனித மூலதன மதிப்பீடு

- கல்வி மற்றும் சுகாதாரப் பணிகளில் முதலீடு செய்வதில் இந்தியாவானது உலகின் 158வது இடத்தில் உள்ளது.
- இந்த ஆய்வானது 'த லான்சட்' என்ற பத்திரிக்கையில் பிரசுரமாகியுள்ளது.
- இந்த ஆய்வு பின்லாந்தை முதலிடத்தில் வைத்துள்ளது.
- இதில் அமெரிக்கா 27ம் இடத்திலும், சீனா 44வது இடத்திலும், பாகிஸ்தான் 164வது இடத்திலும் உள்ளன.
- கீழ்க்காணும் தெற்காசிய நாடுகள் இந்தியாவுக்கு கீழ்நிலையில் உள்ளன.
    - பாகிஸ்தான் (164)
    - வங்காள தேசம் (161)
    - ஆப்கானிஸ்தான் (188)
- அதே பிராந்தியத்தில் கீழ்க்காணும் நாடுகள் மனித மூலதனத்தின் அடிப்படையில் இந்தியாவை விட சிறப்பாக செயல்படுகின்றன.
    - இலங்கை (102)
    - நேபாளம் (156)
    - பூடான் (133)
    - மாலத்தீவுகள் (116)

- - - - - - - - - - - - - - -